**செய்தி வெளியீடு எண்: 651** **நாள்: 31.10.2012**

# செய்தி வெளியீடு

சென்னைக்கு அருகே நிலை கொண்டுள்ள "நீலம்" புயல், தீவிரப் புயல் என வானிலை ஆராய்ச்சி மையத்தால் இன்று மதியம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தீவிரப் புயல் இன்று மாலை சென்னைக்கு அருகில் கரையை கடக்க உள்ளது தொடர்பாக ஏற்கெனவே எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், புயல் கரையை கடக்கும்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் இன்று (31.10.2012) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், உள் துறை முதன்மைச் செயலாளர், காவல் துறை தலைமை இயக்குநர், வருவாய்த் துறை முதன்மைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர், வேளாண்மைத் துறைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள தாழ்வான பகுதிகளில் குடியிருப்பவர்களை மீட்பு மையங்களுக்கு கொண்டு செல்லவும், அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் போன்ற வசதிகளை செய்து தரவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மேலும், சென்னை மாநகரில் உள்ள அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் மாலை 3.00 மணிக்கு தங்கள் இல்லங்களுக்கு செல்லலாம் என்றும் உத்தரவிட்டார்கள். தனியார் நிறுவனங்களும் தங்கள் பணியாளர்களை மாலை 3.00 மணியளவில் இல்லம் செல்ல அனுமதிக்குமாறு தனியார் நிறுவனங்களை கேட்டுக் கொள்ள நிவாரண ஆணையருக்கு உத்தரவிட்டார்கள்.

ஏற்கெனவே திட்டமிட்டு நடவடிக்கை எடுத்துள்ளபடி, குடிநீர், பால் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் அனைத்து இடங்களிலும் தேவையான அளவுக்கு கிடைப்பதை உறுதி செய்யவும், மண்ணெண்ணெய், டீசல் போன்றவை தேவையான அளவுக்கு இருப்பு இருப்பதை உறுதி செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்

புயல் காரணமாக விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும், புயல் காரணமாக மின் தடை ஏற்படும்போது, ஜெனரேட்டர்கள் மூலம் தொடர்ந்து குடிநீர் கிடைப்பதை உறுதி செய்யவும், பெருமழை பெய்யக்கூடிய அனைத்து கடலோர மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கும் நாளை விடுமுறை அளிக்குமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 31.10.2012